செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100

# திருக்குறள் உரை மரபு

## பயிலரங்கம் – 01

## (02.04.2025 – 08.04.2025)

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ் உரை மரபு மிகத் தொன்மையானது. இன்று கிடைத்திருக்கக்கூடிய காலத்தால் மூத்த இலக்கண நூலான தொல்காப்பியத்திற்கும் முன்னரே உரை நூல்கள் இருந்தமைக்கான சான்றுகள் கிடைக்கப்பெறுகின்றன. பண்டைக் காலத்தில் உரை இயற்றுவதையே புதிய படைப்பிற்கு இணையானதாகக் கருதியுள்ளனர்.

மூல நூலாசிரியர் தாம் பெற்றுணர்ந்த அனுபவத்தின் வழி படைப்பை உருவாக்குகிறார். நூலாசிரியர் கருதிய பொருளுடன் மேலும் பலவகையான விளக்கங்கள் உரையாசிரியர்களால் கிடைக்கப்பெறுகின்றன. அவ்விளக்கங்கள் உரையாசிரியர்களின் கொள்கைப் பின்புலத்தை வெளிப்படுத்துகின்றன.

வெவ்வேறு கொள்கைப் பின்புலம்கொண்ட பலரால், ஒரு நூலிற்கு உரை எழுதப்படும் நிலையில், பன்முகப்பட்ட உரை விளக்கங்கள் கிடைக்கப்பெறுகின்றன. மூல நூலைப் பற்றிய வெவ்வேறு வகையான புரிதல்களை வெளிப்படுத்துகின்ற வாய்ப்புகளையும் உரையாசிரியர்களின் கொள்கைப் பின்புல விளக்கங்கள் நமக்கு அளிக்கின்றன.

தமிழ் மரபில் தொல்காப்பியம், திருக்குறள், திருமுருகாற்றுப்படை சிவஞான சித்தியார் சுபக்கம் ஆகிய நூல்களுக்கு மட்டுமே பல உரைநூல்கள் தோன்றியுள்ளன. இவற்றுள் திருக்குறளுக்கான உரை நூல்கள் பல்வேறு வரலாற்றுப் பின்புலம்

கொண்டவையாக அமைகின்றன. காலந்தோறும் திருக்குறளுக்குப் பல்வகையான உரை நூல்கள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இந்த வகையில் எண்ணிலடங்கா உரை நூல்கள் திருக்குறளுக்கு உண்டு.

திருக்குறளுக்கு உரை எழுதிய பழைய உரையாசிரியர்கள் குறித்துத் தனிப்பாடல் ஒன்று இவ்வாறு குறிப்பிடுகின்றது.

**தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்**
**பரிதி பரிமே லழகர் - திருமலையர்**
**மல்லர் பரிப்பெருமாள் காலிங்கர் வள்ளுவர்நூற்கு**
**எல்லையுரை செய்தார் இவர்.**

இவர்களுள் பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, பரிப்பெருமாள், காலிங்கர் ஆகிய ஐவர் இயற்றிய உரைகள் மட்டுமே கிடைக்கப்பெற்று அச்சில் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றிற்கிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டுணர்ந்து ஆய்வுக்குட்படுத்துதல் அவசியமாகிறது

பொதுவாகத் தமிழ் உரையாசிரியர்கள் நூற்பொருள் விளக்கம் தருதல், பிறருரை காட்டல், பிறருரை மறுத்துத் தன்னுரை காட்டல், பிறருரை தழுவுதல், பிறநூற் மேற்கோள் காட்டல், பாடவேறுபாடு சுட்டல் முதலான புலமைத்துவ உரைவிளக்கங்களை நிகழ்த்துகின்றனர். சில இடங்களில் மூலபாடம் குறித்து உரையாசிரியர்கள் காட்டும் விளக்கங்கள் செம்பதிப்புக்குரிய கூறுகளை வழங்குகின்றன. இப்படியான பல்வேறு புலமைத்துவ உரையாடல்கள் திருக்குறள் உரை நூல்களில் அமைந்துள்ள பாங்கு குறித்து ஆய்வு செய்வது காலத்தின் தேவையாகிறது.

இதனைக் கருத்தில் கொண்டு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் “திருக்குறள் உரை மரபு” என்னும் தலைப்பிலான பயிலரங்கை நடத்த உள்ளது.

இப்பயிலரங்கில் தமிழியலில் முனைவர் பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் பங்கேற்கலாம். அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பயிலரங்கின் விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை - 40
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 02.04.2025 முதல் 08.04.2025 வரை 7 நாள்கள்.
3. பயிலரங்கு நடைபெறும் நேரம்: முற்பகல் 10.00 - 01.00 & பிற்பகல் 02.00 - 5.00.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, நாட்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் பங்கேற்க விரும்புவோர் https://forms.gle/RVQD5UFAnmt2KM94A என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழே தரப்பட்டுள்ள விரைவுக் குறியீடு (OR Code) மூலமாகவோ விண்ணப்பத்தை நிறைவுசெய்து அனுப்பிவைக்கலாம்.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: 27.03.2025. இதற்குப் பின்னர் வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டா.
11. பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 27.03.2025 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலம் தகவல் தெரிவிக்கப்படும்.
12. பயிலரங்கில் பங்கேற்போர் அனைத்து அமர்வுகளிலும் தொடர்ந்து பங்கேற்க வேண்டும். தாமதமோ, இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**